Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 34/2023**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | எஸ்டேட் வேலை |
| பெயர் | - | சுப்பிரமணியன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராவுத்தர் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | பன்னிமேடு, சங்கிலிரோடு. | வயது | - | 45 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் வால்பாறை பன்னிமேடு, சங்கிலிரோட்டில் வசித்து எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.05.2023-அன்று மதியம் 03.00 மணி இருக்கும். சங்கிலிரோட்டிலுள்ள வீட்டில் ஆஜர் எதிரி தர்மலிங்கம் எனது மருமகள் பவித்ராவிடம் சண்டைப் போட்டுக்கொண்டிருந்தார். தகாத முறையில் உன்னை நான் தான் செஞ்சிருவேன். எனக்குதான் நீ புள்ள பெக்கபோற, தேவிடியா மவளே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும் என் குடும்பத்தார் அனைவரையும் கெட்ட வார்த்தையால் திட்டினார்.

2. நான் ஏன் கெட்ட வார்த்தையால் திட்டி சண்டை போடுகிறார் என்று என் மருமகளிடம் தான் கேட்டேன். என் மருமகளிடம் இது சம்பந்தமாக பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி கத்தியை எடுத்துவந்து வலது கையில் புஜத்தில் குத்திவிட்டார். சாட்சி வலது கையை நீட்டி வலதுகையின் டிசர்ட்டை உயர்த்தி காட்டியபோது அதில் காயம்பட்ட தழும்பு இருந்ததை நீதிமன்றம் பதிவு செய்கிறது.

3. பக்கத்தில் சத்தம் கேட்டுவந்த ஒரு பெண் முதல்உதவி செய்தார். அவர் பெயர் நந்தினி. அப்புறம் கம்பெனி ஆஸ்பிட்டலுக்கு கூட்டி சென்றார்கள். அங்கிருந்து வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். அப்புறம் S.I. சார் வந்து விசாரித்துக்கொண்டிருந்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.**

4. தர்மலிங்கம் என்னை கத்தியால் குத்திய கத்தியைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அந்த கத்தி தற்போது நீதிமன்றத்தில் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**:

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.